[25th July 1962

வெடுக்கப்பட்டது. இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஐ.ஜி. ஆப் போலீஸ் இவர்களெல்லாம் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வந்தாகி விட்டது. இப்பொழுது ஸோனல் போலீஸ் போர்ஸ் நேரடியாக துவங்க வேண்டிய தருவாயில் இருக்கிறது. 'நாட் எட்' என்று நான் சொன்னது, ஸோனல் போலீஸ் போர்ஸ் வரவேண்டிய நிலையில் இருக்கிறது. மற்றதெல்லாம் முடிந்துவிட்டன என்ற அர்த்தத்தில் தான். இதற்கு சம்பந்தப்பட்ட ராஜ்யங்களும் ஒப்புக்கொண்டிருக்கின்றன.

திரு. மீ. கலியாணசுந்தரம்: எந்தெந்த ராஜ்யங்களுக்குப் பொதுவாக இந்த போலீஸ் படை இருக்கும்? யாருடைய தலைமையின் கீழ் இயங்கும்? ஏதாவது ஒரு பணிக்கு அழைக்கப்பட வேண்டுமாயின், எப்படி அழைக்கப்படுவார்கள்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: தமிழ் நாட்டு அரசாங்கம், மைசூர், கேரளா, ஆந்திரா ராஜ்யங்கள் ஆகிய நான்கு ராஜ்யங்களுக்கும் சேர்ந்து இந்தப் பொது போலீஸ் படை இருக்கும். மற்ற விவரங்கள் எல்லாம் தனியாகக் கேள்வி போட்டால் சொல்லப்படும். எந்த ராஜ்யத்திலாவது அவசரம் ஏற்பட்டால், இந்தப் படையைப் பயன் படுத்த வேண்டுமென்பதுதான் இதன் அடிப்படையான நோக்கம்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இதற்காக ஆகக்கூடிய செலவு எந்த விகிதாசாரத்தில் பிரிக்கப்படும்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஆகும் செலவை நான்கு மாநில ஆட்சிகளும் பகிர்ந்து கொள்ளும்.

தற்காலிக அரசாங்க ஊழியர்கள்

* 647 **கேள்வி.**—திரு. முனு ஆதி: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சில தமிழ்நாடு அரசாங்க அலுவலகங்களில் தற்காலிகமாக உள்ளவர்களை நிரந்தரமாக்க உத்தேசமுண்டா?

(இ) இல்லையென்றால், அவ்வலுவகங்களில் வேலைசெய்யும் பல ஊழியர்கள் பல ஆண்டு காலங்கள் தாற்காலிகமாகவே வைக்கப்பட்டுள்ளனரே, அவர்களின் நிலை என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) & (*b*) If the offices are to attend to items of work of a permanent nature they will be made permanent in due course.

The temporary personnel employed under the emergency provisions will be retrenched if the offices are abolished. In suitable cases the temporary personnel are allowed certain concessions in regard to age, etc. to enable their absorption in other departments of Government.